"மொழிபல கற்கச் செல்லுங்கள் – ஆனால்
முத்தமிழ் உயிராச் சொல்லுங்கள்"
-வீறுகவியரசர் முடியரசனார்

# வீறுகவியரசர் முடியரசனார் கவிதைகள் ஒப்பித்தல், பேச்சு, கட்டுரைப் போட்டிகள்

<u>அறிவிப்பு</u>

**நாள்: 16.10.2022 ஞாயிறு காலை 9.00 மணி**

**இடம்: அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளி, காரைக்குடி.**

வீறுகவி முடியரசர் கவிபாடி முத்தமிழுக்கு முடி சூட்டுவோம்!
வீரத்தமிழ் மூவேந்தர் செந்தமிழ் ஆட்சி நிலை நாட்டுவோம்!!
வீண்சாதி மதமற்ற சமத்துவத் தமிழ் நாடு மீட்டுக் காட்டுவோம்!!!

அன்புடையீர், வணக்கம்.

தமிழ் வாழ்வே தம் வாழ்வாய் வாழ்ந்து, தமிழ்த் தாய்க்குப் பாமாலை பல சூட்டித் தம் கவிதைகளைக் கைவாளாய்க் கொண்டு முத்தமிழுக்கு முடிசூட்டப் போராடி, மூவேந்தர் நிலம் மீட்க, தமிழுலகெங்கும் தாய்மொழி ஆட்சி திகழ, செந்தமிழர் கோலோச்ச, சாதி சமயமற்ற அறிவார்ந்த சமத்துவச் சமுதாயம் அமைக்க - வீறுகவி பாடி, பாடிய படியே தம் இறுதி மூச்சு வரை கொள்கைக் குன்றமாக – தன்மானத் தங்கமாக – தலைதாழாச் சிங்கமாக - கவிஞர்க்கும் கவிஞராக - கவியுலக முடியரசராக - வீறுகவியரசராக வாழ்ந்த முடியரசனார் பெயரில் அமைந்த இவ் அவைக்களம் ஆண்டு தோறும் மாணவர்களிடையே முடியரசனார் கவிதைகள் ஒப்பித்தல், பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தி **'வீறுகவியரசர் முடியரசன் பரிசு'** கள் வழங்கித் தமிழ்மொழி, இன, நாட்டுப் பற்றை ஊட்டி வருகிறது.

அவ்வழி அப்போட்டிகள் இவ்வாண்டு **16.10.2022 ஞாயிற்றுக்கிழமை, காலை 09:00 மணிக்கு, காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில்** நடைபெற உள்ளது.

பள்ளித் தலைமை ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், பல்கலைக்கழகத் துறைத் தலைவர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்கள், மாணாக்கர்களை ஆக்கமும் ஊக்கமும் தந்து - இப்போட்டிக்கு அனுப்பி வைத்து எம் தமிழ்த் தொண்டுக்குத் துணை புரிய விழைகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

**பேரா.முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை** (தலைவர்) – **99443 60725**
**முனைவர் தமிழ் முடியரசன்** (செயலர்) **– 98425 89571**
**முனைவர் இரா.வனிதா** (இணைச்செயலர்) – **94860 02268**
**திரு.நா.கௌதமன் (துணைச்செயலர்)- 63796 70194**

வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம்
17, பூங்கொடி வீதி, 569, சூடாமணிபுரம், காரைக்குடி-630 003.

# போட்டி நெறிமுறைகள்

01) இவ் அவைக்களம் நடத்திய போட்டிகளில் ஏற்கனவே பரிசு பெற்றோர் இப்போட்டிகளில் பங்கேற்க இயலாது.

02) இப்போட்டிகளில் பங்கேற்கும் மாணாக்கர்கள் பெயர்ப் பட்டியலை 13.10.2022 க்குள் thamizhmudiyarasan@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு கல்விநிறுவனத் தலைமைஆசிரியர் / முதல்வர் / கல்லூரி, பல்கலைக்கழகத் துறைத் தலைவர் கையொப்பம் மற்றும் முத்திரை & பொறுப்பாசிரியர் தொடர்புஎண்ணுடன் உள்ளடக்கிய கடிதத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

03) போட்டிப் பிரிவுகள் 1 முதல் 15 வரை ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் பிரிவிற்கு இருவர் (கல்லூரி / பல்கலைக்கழகமாக இருப்பின் ஒவ்வொரு துறையிலிருந்தும் இருவர்) வீதம் பங்கேற்கலாம். மதிய உணவு கொண்டு வருதல் வேண்டும். பள்ளிமாணவர்கள் பெற்றோர்/ஆசிரியர் பாதுகாப்பில் பங்கேற்க வேண்டும்.

04) பிரிவு 1 முதல் 15 வரை ஒவ்வொரு போட்டிக் மூன்று பரிசுகள் வழங்கப் பெறும்.

05) ஒப்பித்தல் போட்டியில் பிரிவு 3-6 பொருளுணர்ச்சி தோன்ற, ஒலிப் பிழையின்றி ஒப்பித்தல் வேண்டும். பாடுதலோ நடித்தலோ கூடாது. பிரிவு 1,2 மட்டும் பாடலாம்.

06) பேச்சுப் போட்டியின் கால வரையறை -- பள்ளி மாணவர்களுக்கு (பிரிவு -7,8,9,10) ஐந்து மணித் துளிகளும், கல்லூரி / பல்கலைக்கழக மாணவர்களுக்கு (பிரிவு-11) ஏழு மணித் துளிகளும் ஆகும்.

07) கட்டுரைப் போட்டியின் கால வரையறை ஒரு மணி நேரமும், பக்க அளவு ஆறு பக்கங்களுமாகும்.

08) கட்டுரை எழுத அவைக்கள முத்திரையிட்ட தாள்கள் வழங்கப் பெறும். ஏனைய எழுது பொருள்களை மாணவர்களே கொண்டு வர வேண்டும்.

09) நடுவர்கள் தீர்ப்பின் படி போட்டியில் வெற்றி பெற்றோர் பட்டியல் உரிய கல்வி நிலையங்களுக்கு உடன் அனுப்பப் பெறும்.

10) போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் அவைக்களச் சான்றிதழும், போட்டியில் வெற்றி பெற்றோருக்கு வீறுகவியரசர் முடியரசன் பரிசுகளும், வீறுகவியரசர் முடியரசனார் விழாவில் பெருஞ்சான்றோர்கள் திருக்கைகளால் வழங்கப்பெறும். விழா நாள் குறித்து உரிய கல்வி நிலையங்களுக்கு விழாவிற்கு முன்னர் தெரிவிக்கப் பெறும்.

[குறிப்பு:- முடியரசனார் நூல்கள் அனைத்தும் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் (Tamil Virtual Academy) www.tamilvu.org என்ற இணைய தள முகவரியில் படிக்கலாம். இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.]

# ஒப்பித்தல் போட்டி

## பிரிவு '1' → 1, 2 ஆம் வகுப்புகள்

வீறுகவியரசர் முடியரசனார் இயற்றிய **நாட்டுப்பண்**
**(சனகண இசையிற் பாடுக..)**

உயிருடல் பொருள்திரு நாடெனும் நினைவே
ஓங்கிட வேண்டுவம் நாமே
துஞ்சாது நின்று குலையாம லிந்நாட்டைத்
தோழமை கொண்டுல காள்வோம்
நெஞ்சு கெடாவகை உரமாய் நின்றால்
நிற்பவர் எதிரில் உளரோ?
படைபலம் நாமே பாரீர்!
தடைகளை நீக்கிட வாரீர்!
நாமே தமிழுல காள்வோம்!
புகழ்வளர் நம்முயர் தாயக நினைவே
போற்றுவம் போற்றுவம் நாமே
நலமே மிகவே பெறவே
பலபல நல மிக வே.

* * *

## பிரிவு '2' → 3, 4 ஆம் வகுப்புகள்

வீறுகவியரசர் முடியரசனார் இயற்றிய **பாப்பா பாட்டு**

அறிவை வளர்த்திடு பாப்பா – நாட்டை
ஆளப் பிறந்தவள் நீயன்றோ பாப்பா
அறிவைக் குறைத்திடும் தாள்கள் – வாங்கி
ஆதரித் தாலிங்குத் தீமையே பாப்பா..

அன்புடன் ஒற்றுமை வேண்டும் – சாதி
அகம்பாவத் தீமையை அகற்றிடல் வேண்டும்
உண்மை நெறிதனைப் போற்று – நெஞ்ச
உறுதி குறைந்திடாத் தன்மையை ஏற்று..

முயற்சியில் நம்பிக்கை வேண்டும் – கெட்ட
மூடத் தனங்களைப் போக்கிடல் வேண்டும்
அயர்ச்சியே இல்லாது பாப்பா சொந்த
அருமைத் தமிழ்மொழி பயின்றிடு பாப்பா..

ஒழுக்கமே உயர்வுக்கோர் ஏணி – அதைநீ
உணர்ந்து நடந்திட்டால் நாட்டுக்கோர் ஆணி
அழுக்கின்றி உடல்உள்ளம் கொண்டால் – துன்பம்
அணுகவே அணுகாது நின்னையே கண்டால்..

* * *

## பிரிவு '3' → 5, 6 ஆம் வகுப்புகள்

வீறுகவியரசர் முடியரசனார் இயற்றிய **நற்பணியாற்றுவோம்**

நாட்டுக்கு நற்பணி யாற்றிடுவோம் – வாழ்வில்
நல்லவர் கொள்கையைப் போற்றிடுவோம்
கூட்டத்தில் உண்மையைச் சாற்றிடுவோம் – அங்குக்
கூறிய தைச்செயல் ஆக்கிடுவோம்
நற்கலை பற்பல நாட்டிடுவோம் – இந்த
நானிலத் திற்புகழ் கூட்டிடுவோம்
தற்குறி என்றிலா தாக்கிடுவோம் – தீய
தந்நலம் யாவையும் போக்கிடுவோம்

விஞ்ஞானி பற்பலர் உண்டெனவே – இங்கு
வேண்டும்மு யற்சிகள் கண்டிடுவோம்
பொய்ஞ்ஞானப் பித்தரை வென்றிடவே – இந்தப்

பூமிக்கு நல்வழி கண்டிடுவோம்
ஏழைமை நீக்கிடச் சூளுரைப்போம் – தீமை
எங்கெழு மாகினும் வாளெடுப்போம்
தோழமை பாடிட யாழெடுப்போம் – மக்கள்
துன்பங்கள் யாவையும் தூளடிப்போம்

சாதிகள் ஆக்கிய தீமைகளை – அந்தச்
சாத்திரக் குட்டையின் ஆமைகளை
மோதித் தகர்த்திடல் தீமையிலை – நீங்கள்
மூண்டெழு வீரினும் ஊமைகளோ?
சோம்பலை ஏய்த்தலை நீக்கிடுவோம் – கெட்ட
சூழ்ச்சிகள் வஞ்சனை போக்கிடுவோம்
கூம்பிய தோள்களை ஏற்றிடுவோம – நாளும்
கூடும் உழைப்பினை யாக்கிடுவோம்

வாய்ப்பறை சாற்றலைத் தைத்திடுவோம் – நெஞ்சில்
வாய்மையை நேர்மையை வைத்திடுவோம்
ஏய்ப்பதை நாமினிநைத் தெறிவோம் – பொய்யை
ஏறி மிதித்ததைப் பிய்த்தெறிவோம்
வேதங்கள் பூதங்கள் என்றுரைத்தால் – அந்த
வீணரின் கொள்கையைக் கொன் றழிப்போம்
வாதங்கள் மேடையில் நின்றுரைப்போம் – சொன்ன
வாய்மைகள் யாவையும் நன்றமைப்போம்.

## பிரிவு ‘4’ → 7, 8 ஆம் வகுப்புகள்

வீறுகவியரசர் முடியரசனார் இயற்றிய **இளைஞர்களே கேளுங்கள்..**

இளையவரே ஒன்று கேளுங்கள் – சொல்லும்
என்மொழி கேட்டே வாழுங்கள்
பழகிட என்முன் வாருங்கள் – நல்ல
பண்புடன் நீர்முன் னேறுங்கள்
கலைகளைக் கற்றே தேருங்கள் – அங்கே
கற்பதை வாழ்விற் சேருங்கள்
நிலைகளை இங்கே பாருங்கள் – கையை
நெஞ்சினில் வைத்தே கூறுங்கள்

அரசியற் பாடம் போற்றுங்கள் – போற்றி
அறிவினை நெஞ்சில் ஏற்றுங்கள்
அரசியற் போரில் நாட்டங்கள் – செல்லின்
அய்யோ சூழும் வாட்டங்கள்
உடைகளைச் சற்றே மாற்றுங்கள் – நாட்டின்
உடைமைகள் எல்லாம் போற்றுங்கள்
கடமையைச் செய்தே காட்டுங்கள் – கெட்ட
கயமையைத் தூவென் றோட்டுங்கள்

பொதுவிடம் நீங்கள் செல்லுங்கால் – செய்யும்
புன்செயல் யாவுந் தள்ளுங்கள்
எதுசரி என்றே சொல்லுங்கள் – பின்னர்
எவ்வழி நன்றோ செல்லுங்கள்
சாதியின் வேரை வெட்டுங்கள் – நெஞ்சில்
சமநிலைப் பண்பை ஒட்டுங்கள்
மேதினி எல்லாஞ் சுற்றுங்கள் – அங்கே
மேன்மைகள் கண்டே பற்றுங்கள்

வாழ்க்கையில் மேடு பள்ளங்கள் – போக்க
வழிவகை கண்டே கொள்ளுங்கள்
தாழ்ச்சிகள் எல்லாந் தள்ளுங்கள் சோம்பித்
தளர்வதை நீங்கள் எள்ளுங்கள்
மொழிபல கற்கச் செல்லுங்கள் – ஆனால்

முத்தமிழ் உயிராச் சொல்லுங்கள்
இழிசெயல் சாய்த்தே வெல்லுங்கள் – நாட்டில்
எழில்வளங் காண நில்லுங்கள்

**முழங்கட்டும் போர்ப்பறை**

ஆர்த்து முழங்கட்டும் பொருநர்பறை – புகழ்
சேர்த்து விளங்கட்டும் தமிழர்படை
பார்த்துப் பகைவர்கள் வேர்த்துப் புறமிடப்
பாட்டுப் புறம்பெறக் காட்டும் திறல்வர

காட்டுப் புலியெனக் காட்டும் மறவர்கள்
காப்பர் தமிழினைச் சேர்ப்பர் புகழ்மொழி
நாட்டில் அரியணை ஏற்றி வணங்கிட
நாட்டம் மிகுந்ததைக் காட்டும் வகையினில்

வேற்றுப் புலமென வேட்டை யிடவட
நாட்டுப் புலத்தவர் வேட்டுப் புறப்படின்
தோற்றுப் பிறக்கிடத் தூக்கி எறிந்திடும்
தோளுண் டெமக்கெனத் தோம்தோம் எனுமொலி

* * *

## பிரிவு ‘5’ → 9, 10 ஆம் வகுப்புகள்

### வீறுகவியரசர் முடியரசனார் இயற்றிய **வேண்டிய எண்ணங்கள்**

எண்ணுதற்கு மனம்வேண்டும், எண்ணிப் பின்னர்
எடுத்துரைக்கும் உரம் வேண்டும், இதனைச் செய்ய
நண்ணுபவர்க் கிடங்கொடுக்க வேண்டும், அன்றி
நலிவுதரத் தடைசெய்ய எண்ணல் நன்றோ?
கண்ணெதற்குக் காட்சிகளைக் காண அன்றோ?
காணாமற் கண்மூட விழைதல் நன்றோ?
உண்ணுதற்குப் பயனில்லா உண்டி ஏனோ?
உரிமைநல்கல் ஆள்வோர்க்கு வேண்டும் எண்ணம்;

நாளைக்கு மாணவரே நாட்டை ஆள்வோர்
நம்கையில் எதிர்காலம் உளதே என்று
நாளுக்கு நாளுணர்ந்து கடமை ஆற்றும்
நல்லுணர்வே ஆசாற்கு வேண்டும் எண்ணம்;
வேளைக்கு வந்திருந்து காலம் பேணி
வினையின்மேற் கருத்தூன்றி ஆசாற் போற்றிக்
கேளிக்கை விடுத்தொழித்து மாண்பை ஆக்கக்
கிளர்ந்தெழுதல் மாணவர்க்கு வேண்டும் எண்ணம்

துன்புறுவோர் நிலைகாணின் துடித்துச் சென்று
தோள்தந்து துயர்துடைக்கும் எண்ணம் வேண்டும்;
அன்பொன்றே நிறைகின்ற எண்ணம் வேண்டும்;
அரிவையர்க்கும் உரிமைதரும் எண்ணம் வேண்டும்;
என்பெறினும் நடுநிலைமை வழுவா எண்ணம்
எல்லோர்க்கும் இனியசொலிப் பணியும் எண்ணம்
முன்பிருந்த நன்றியுணர் வெண்ணம் வேண்டும்;
மொழிந்தஇவை நாகரிக எண்ணம் என்பர்.

கல்லூரிக் கல்விசொலத் தமிழே வேண்டும்
கலைச்சொற்கள் தமிழ்மொழியில் ஆக்கல் வேண்டும்
மெல்லோசைத் தமிழிசையே முழங்க வேண்டும்
மேலுயர்ந்த கோவிலுளும் தமிழே வேண்டும்
வல்லூறாய் வருமொழிகள் இங்கு வேண்டா
வடவருக்குத் தாள்பிடித்துப் பதவி ஏற்கும்
நல்லோரே நும்தாயை இகழ்ந்து கூறேல்!
நம்நாடு தமிழ்நாடென் றாதல் வேண்டும்

அரசிருக்கை தமிழ்மொழிக்கே நல்க வேண்டும்
    ஆள்வோரும் இதையுணர வேண்டும் ஈது
தரிசுநிலம் அன்றெமக்கும் உணர்ச்சி யுண்டு
    தமிழ்மொழிக்கே உயிரீயும் இளைஞர் உண்டு
பரவிவரும் தென்றலென இனிது சொல்வோ
    படியாமற் புறக்கணித்தால் வெகுள்வோம் போரின்
முரசொலியே கேட்குமென உரைப்ப தெல்லாம்
    முடியரசர் வளர்த்ததமிழ் வாழும் எண்ணம்.

<u>தமிழ்வாழ்வு</u>

அரசியற்கும் பொருளியற்கும் சாதி கட்கும்
    அப்படியே மொழியியற்கும் ஒவ்வோர் கட்சி
பரவிவரக் காண்கின்றோம், ஒன்றுக் கொன்று
    பலங்கொண்டு தாக்குவதும் காணு கின்றோம்
விரவியிவை வளருவதால் தமிழர் வாழ்வில்
    விளைபயன்தான் ஒன்றுண்டோ? அனைத்துங் கூடி
ஒருநிலையாய் ஓரமைப்பாய் இயங்கக் கண்டால்
    உளதாகும் தமிழ்வாழ்வு; இன்றேல் தாழ்வே

வேலெடுத்துப் போர்தொடுத்த வீரம் எங்கே?
    வெங்குருதி வாளெங்கே? தோள்கள் எங்கே?
கோலெடுத்த பேரெல்லாம் ஆள வந்தார்
    கொட்டாவி விட்டபடி தூங்கு கின்றாய்!
மாலுடுத்த தமிழ்மகனே! மானம் எங்கே?
    மயங்காதே விழி! எழு! பார்! உலகை நோக்கு!
கால்பிடித்து வாழ்வதுவோ தமிழ வாழ்வு?
    கானத்துப் புலிப்போத்தே வீரங் காட்டு!

* * *

## பிரிவு ‘6’ → 11, 12 ஆம் வகுப்புகள்

### வீறுகவியரசர் முடியரசனார் இயற்றிய **மூன்று தமிழ் தோன்றியது**

நீர்நிறைந்து யாண்டும் நிலமொன்றுங் காணாமல்
பார்மறைந்து வெள்ளம் பரவிநின்ற தோர்காலம்;
அந்தப் புனல்குறைய ஆங்கிருந்த ஓங்குமலை
வந்து தலைகாட்டி வானோக்கி நின்றதைத்தான்
கற்றோன்றி மண்தோன்றாக் காலமெனப் பூவியலைக்
கற்றோர்தம் நூலிற் கணித்தார்கள்; மண்டிணிந்த
ஞாலத்தின் முன்தோன்றும் நீலப் பெருங்கல்லைக்
கோலக் குறிஞ்சியெனக் கூறி மகிழ்ந்தனர்; அவ்
வெற்பிடத்துங் காட்டிடத்தும் வேட்டம் பலபுரிந்து
கற்களிலே தீயெழுப்பிக் காலங் கடத்தியவன்
ஆடை யறியாமல் ஆசை புரியாமல்
வீடுந் தெரியாமல் வீரமட்டுந் தானறிவான்;
ஆதி மனிதனவன் அன்னான் கருத்துரைக்க
ஏதும் அறியாதான் எண்ணம் எடுத்தியம்பப்
பேசும் மொழியறியான் பிள்ளைநிலை யுற்றிருந்தான்;
பேச விழியுண்டு பேணும் முகமுண்டு
நீண்டஇரு கையுண்டு நெஞ்சிற் படுங்கருத்தை
வேண்டும் படிஎடுத்து விண்டுரைத்தான் சைகையினால்;
எண்ணம் பலித்துவிடின், எக்களிப்பு மீதூரின்
நண்ணும் உணர்ச்சியினால் நாடித் துடிப்பேறித்
துள்ளிக் குதித்தெழுந்து தோழனுக்குத் தன்கருத்தை
உள்ளக் கிளர்ச்சிதனை ஓதினான் சைகையினால்;
அந்தக் குறிப்பும் அவன்காட்டுஞ் சைகைகளும்
முந்திக் கலந்து முகிழ்த்தனகாண் கூத்தாக;
மற்றொருநாள் மாந்தன் மகிழ்ந்து குதித்துவந்தான்
உற்ற பெருங்களிப்போ உள்ளத்துப் பூரிப்போ
பெற்ற பெரும்பொருளோ பெண்காதற் கூட்டுணர்வோ

எற்றுக்கே ஆடினனோ என்ன நடந்ததுவோ
எப்படியோ ஒருணர்ச்சி இன்னதெனாப் பேருணர்ச்சி
அப்படியே உள்ளோடி ஆவி கலந்தெழுந்து
நாடிநரம் பெல்லாம் நடமாடச் செய்தோடிக்
கூடி மனத்தகத்திற் கூத்தாட்டம் ஆடியது;
கூத்தாடும் அவ்வுணர்ச்சி கூடி நிலைநிற்க
ஆற்றாமல் வாய்திறந்தே ஆர்ப்பரித்துக் கூவிவிட்டான்;
கூவுங் குரல்கேட்டான் கொண்டான் பெருவியப்பு;
கூவினான் மீண்டுங் குரலெடுத்துக் கூவினான்;
கோட்டிற் குயிலொன்று குக்குக்கூ என்றொலிக்கக்
கேட்டான் கிளைக்குயில்போற் கூவினான் வாய்குவித்தே;
ஒட்டி இருகுரலும் ஓரொலியாய்த் தொட்டிசைக்க
விட்டுவிட்டுக் கூவி விளையாடிக் கொண்டிருந்தோன்
கிட்டும் பெருமகிழ்வால் கொட்டினான் கையிரண்டும்
கொட்டினான் கூவினான், கூவினான் கொட்டினான்
கூவுதலுங் கொட்டுதலுங் கூடி இசையென்றும்
மேவிவருந் தாளமென்றும் மேதினியில் பூத்தனகாண்;
எண்ணுங் கருத்தை எடுத்துரைக்க அம்மாந்தன்
கண்ணசைத்தான் கையசைத்தான் காலங் கடந்துவரப்
பையஅவன் நாவசைத்தான்; பாலோ தெளிதேனோ
செய்யஒரு நற்கரும்பின் தீஞ்சாறோ என்னஒரு
சொன்மொழிந்தான், மீண்டுமதைச் சொன்னான், எதனாலோ
பன்முறையும் பன்னிப் பழகினான் அச்சொல்லை;
சொல்லிப் பழகுமொழி மெல்லத் தமிழாகி
இல்லைநிகர் என்ன இயலாய்க் கனிந்ததுகாண்;
இவ்வண்ணம் முத்தமிழாய் ஏற்றம் பெறுமொழியை
எவ்வண்ணம் ஏத்திப் புகழ்வோம்நாம்? அம்மொழியில்
கூத்தும் இசையுங் குறிக்கின்ற நூலெங்கே?
ஏத்தும் இயல்நூலில் ஏனையவை தாமெங்கே?
பாழுங் கடல்கோளும் பாவிப் பகைக்குலமும்
சூழுங் கொடுவினையால் சொல்லரிய ஏடுகள்தாம்
காணா தொழிந்தனவே; கண்மூடிக் கொள்கையினால்
மாணாச் செயல்செய்தோம் மற்றும் பலஇழந்தோம்;
ஆடிப் பெருக்கிலிட்டோம் அந்தோ நெருப்பிலிட்டோம்
வேடிக்கை மாந்தர் விளையாட்டை என்னென்போம்!
அஞ்சியஞ்சிச் சாகாமல் ஆளடிமை யாகாமல்
எஞ்சியவை காப்போம் இனி.

<*><*><*><*><*><*><*><*>

## <u>பேச்சுப் போட்டி</u>

### பிரிவு ‘7’ → 5, 6 ஆம் வகுப்புகள்

தலைப்பு: வீறுகவியரசர் கவிதைகளில் **'இயற்கை போற்றல்'**

### பிரிவு ‘8’ → 7, 8 ஆம் வகுப்புகள்

தலைப்பு: வீறுகவியரசர் கவிதைகளில் ‘தமிழ், தமிழர், தமிழ்நாடு’

### பிரிவு ‘9’ – → 9, 10 ஆம் வகுப்புகள்

தலைப்பு: வீறுகவியரசர் கவிதைகளில் ‘சாதி ஒழிப்பு’, ‘சமத்துவம்’

### பிரிவு ‘10’ – → 11, 12 ஆம் வகுப்புகள்

தலைப்பு: வீறுகவியரசர் கவிதைகளில் ‘பொதுவுடைமை’

**பிரிவு ‘11’→ கல்லூரி, பல்கலைக்கழகத் துறைகள்**

தலைப்பு: வீறுகவியரசர் கவிதைகளில் ‘அரசியல்’, ‘புரட்சி’

<*><*><*><*><*><*><*><*>

## <u>கட்டுரைப் போட்டி</u>

**பிரிவு ‘12’ → 7,8 ஆம் வகுப்புகள்**

தலைப்பு :வீறுகவியரசர் கவிதைகளில் 'சமூகம்','சமூகநீதி'

**பிரிவு ‘13’ → 9, 10 ஆம் வகுப்புகள்**

தலைப்பு: வீறுகவியரசர் கவிதைகளில் ‘பகுத்தறிவு’, ‘சீர்திருத்தம்’

**பிரிவு ‘14’ → 11 ,12 ஆம் வகுப்புகள்**

தலைப்பு: வீறுகவியரசர் கவிதைகளில் ‘வள்ளுவம்’

**பிரிவு ‘15’ → கல்லூரி, பல்கலைக்கழகத் துறைகள்**

தலைப்பு: வீறுகவியரசர் கவிதைகளில் ‘தன்மானம்’

<*><*><*><*><*><*><*><*>

*<u>நூல்-அஞ்சல்</u>*

பெறுநர்:-

மதிப்புறு தலைமை ஆசிரியர் / முதல்வர் / துறைத் தலைவர் அவர்கள்

அனுப்புநர்:-

வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம்
17, பூங்கொடி வீதி, 569, சூடாமணிபுரம்,
காரைக்குடி 630 003.
அலைபேசி: **9944360725, 9842589571, 9486002268**